31st March 1969]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.-தென் சென்னையில் துப்புரவுப் பணியாளர்கள் 29—12—1967 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். வட சென்னையின் தூய்மைப் பணியாளர்களையும் சேர்த்து சில மாநகராட்சித் தொழிலாளர் சங்கங்கள் 29—12—67 அன்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) இவர்களுடைய முக்கிய கோரிக்கைகள் :

(1) விலக்கு எதுவும் இன்றி மாநகராட்சிப் பணியாளர்கள் அனை வருக்கும் பயன்படுமாறு தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு நிதித் திட் டத்தை நீட்டிக்க வேண்டும்.

(2) தொழிலாளர் பூரிப்பு ஊதிய நிதியில் சேர்ந்துள்ள தொகை யைத் திருப்பிக் கொடுத்தல்.

Madras City Corporation Elections

* 325. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of persons caught and prosecuted for having tried to exercise false vote during Madras City Corporation Elections ; and

(*b*) the number of persons sentenced ?

சென்னை மாநகராட்சி தேர்தல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) சென்னை மாநகராட்சி தேர்தலில் கள்ள ஓட்டுப் போட வந்தவர் கள் எத்தனை பேர் பிடிபட்டு வழக்கு தொடரப்பட்டது ?

(இ) எத்தனை பேர் தண்டனையடைந்தார்கள் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1968-ம் ஆண்டு அக் டோபர் திங்களில் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில் 38 பேர் கைது செய்யப்பட்டனர். ஆள் மாறாட்டக் குற்றம் செய்ததாக அவர்கள் மேல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

(இ) இந்த 38 பேரில் இத்தகைய குற்றமிழைத்ததற்காக, 33 பேருக்கு இதுவரை நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது. எஞ்சிய 5 வழக்குகள் விசாரணை தொடங்கப்படாத நிலையில் உள்ளன.

Chief Ministers' Conference on Community Development

* 326. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the States that took part in the All India State Chief Ministers' Conference on Community Development and Panchayats during 11th and 12th of June 1968 at Madras ;

(*b*) the decisions taken by the Conference ; and

(*c*) the action taken thereon ?